சேர்த்து வசூலிப்பதற்கு, அண்ணா பத்திரிகை மற்றும் இருக்கிற எல்லா பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதை எல்லாம் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்ன காரியத்திற்காகத்தான், இந்த நோக்கத்திற்காகத்தான், விளம்பரம் தரவேண்டும் என்று விதியை மீறி முறைகேடாக இந்த விளம்பரம் தரப்பட்டது என்கிற அடிப்படையில் தான், அது தவறு என்று சொல்லி அதை வசூலிப்பதற்கும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டது. இவ்வளவு தான் பதில்.

திருவான்மியூர் பகுதியில் குடிதண்ணீர் கிணறுகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 841—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, திருவான்மியூர் பகுதியில் குடிதண்ணீர் கிணறுகள் அமைக்கும் திட்டம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சென்னை மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டுள்ள திருவான்மியூர் பகுதிக்கு குடிநீர் வழங்க ரூ. 32.40 இலட்ச மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் படி 4 மீட்டர் விட்ட அளவுள்ள 4 கிணறுகளும், மற்றும் ஒரு குறைந்த பட்ச ஆழமுள்ள குழாய் கிணறும் வெட்டப்பட்டு அவைகளின் மூலம் நில நீர் பெறப்படும். இந்த நீர் 7 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு உயர் மட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு ஏற்றப்பட்டு அங்கிருந்து தெருக்களில் போடப்படும் 23 கி. மீ. நீளமுள்ள குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்படும். வீடுகளுக்கு வீட்டு இணைப்புகள் மூலம் குடிநீர் தரப்படும். குறைந்த வருமானமுள்ள மக்கள் தேவைக்காக பொதுக் குழாய்களும் அமைக்கப்படும்.

இதுவரை 18 கி. மீ. தூரத்திற்கு தெருக் குழாய்கள் போடப்பட்டுவிட்டன. கிணறுகள் மற்றும் தலைமை நீர் நிலையம் கட்டுதல், நீரேற்று இயந்திரங்கள் அமைப்பது போன்ற பணிகளுக்கு வேலைக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு விட்டன. உயர்மட்ட நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய பணிகள் யாவும் 1981 ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நடைபெறக்கூடிய திட்டங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தினார்கள். இப்போது அங்கு தண்ணீர் பற்றாக் குறை அதிக அளவில் இருக்கிற காரணத்தால், பெரிய பெரிய ராணுவ டங்குகளின் மூலமாக தண்ணீரை வரவழைத்து அந்தப் பகுதி மக்களின் தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொல்லி, தண்ணீர் வேண்டும் என்று முறையீடு வந்தால் அந்த முறையீட்டை கவனித்து விநியோகம் செய்யப்படும்.

கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை முறைப்படுத்தும் சட்டம்.

*வினா எண். 842— திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டின் 31 வது கூட்டத் தொடரில் கட்டுமான பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வேலை நிலைமைகள், சம்பளம் பற்றி ஒழுங்கு முறைப்படுத்தும் ஒரு சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அச்சட்டத்தின் பிரதான அம்சங்கள் என்ன? எப்பொழுது சட்டம் கொண்டுவரப்படும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சட்டத்தின் முக்கிய சிறப்பியல்புகள் அடங்கிய * விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்படுள்ளது.

எப்பொழுது சட்டம் கொண்டுவரப்படும் என்பதற்கு தகவல் இல்லை.

---

* 672-674 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.